# SG Digital

## NLB Mobile பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

NLB Mobile செயலி உங்களது தனிப்பட்ட மின்னிலக்க நூலகமாகும். இந்தச் செயலியுடன் நீங்கள் மின்புத்தகங்கள், மின்சஞ்சிகைகள், மின்செய்தித்தாட்கள், மின்கற்றல் வளங்கள் ஆகியவற்றை எளிதில் பயன்படுத்தலாம். அதோடு, உங்கள் கணக்கையும் நீங்கள் சரிபார்க்கலாம் அல்லது இரவல் பொருட்களின் பட்டை குறியீடுகளை உங்கள் கைப்பேசியுடன் ஒளிவருடல் செய்து இரவல் பெறலாம்!

## படிநிலை 1 உங்கள் கைப்பேசியில் NLB Mobile செயலியை நிறுவுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, **NLB Mobile** செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், '**Get**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், '**Install**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.

## படிநிலை 2 myLibrary ID* பயன்படுத்தி பதிவு செய்யுங்கள்

*myLibrary ID என்பது NLB பயன்பாட்டாளர் பெயராகும். இதனைப் பயன்படுத்தி மின்னிலக்க நூலகச் சேவைகள் அனைத்தையும் நீங்கள் அணுகலாம். இது உங்களது அடையாள அட்டை அல்ல.
myLibrary ID பற்றி கேள்விகள் இருக்கிறதா? இந்த இணையத்தளத்தை நாடுங்கள்: go.gov.sg/mylibrary.






3. உங்களது myLibrary ID (இடைவெளி **இல்லாமல்**) மற்றும் மறைச்சொல்லை உள்ளிடுங்கள். உங்களிடம் myLibrary ID இல்லாவிட்டால் அல்லது இருக்கிறதா என உறுதியாகத் தெரியாவிட்டால், "**Register Here**" மீது தட்டுங்கள்.
4. உங்களது myLibrary ID மற்றும் மறைச்சொல்லை மீட்க அல்லது உருவாக்க, உங்களது அடையாள அட்டை எண்ணை <u>**அல்லது**</u> சிங்பாஸை பயன்படுத்துங்கள்.
5. செயலியை நீங்கள் முதல்முறையாகத் தொடங்கும்போது, உங்களுக்கு ஒரு பெயரைக் குறிப்பிட வேண்டும். நீங்கள் உண்மையான பெயரை அல்லது புனைப்பெயரைப் பயன்படுத்தலாம்.
6. செயலியை நீங்கள் முதல்முறையாகப் பயன்படுத்தும்போது, நீங்கள் வருகையளிக்க விரும்பும் 3 நூலகங்கள் வரை தேர்ந்தெடுக்கலாம்.

## படிநிலை 3 மின்புத்தகக்களைத் தேடிப்பார்த்து இரவல் பெறுங்கள், இலவச உள்ளூர் மின்செய்தித்தாட்களை வாசியுங்கள்!






7. மின்புத்தகங்களைத் தேடிப்பார்க்க, நீங்கள் '**eBooks**' பகுதியைப் பார்க்கலாம். மின்செய்தித்தாட்களை வாசிக்க, '**SPH Newspapers**' சின்னத்தின்மீது தட்டுங்கள்.
8. எஸ்பிஹெச் செய்தித்தாட்கள் பக்கத்தில் '**Proceed**' மீது தட்டுங்கள்.
9. நீங்கள் வாசிக்க விரும்பும் உள்ளூர் எஸ்பிஹெச் செய்தித்தாள் சின்னத்தின்மீது தட்டுங்கள்.
10. NLB Mobile செயலியைப் பயன்படுத்த படிப்படியாக வழிகாட்டும் காணொளிகளைக் காண, இந்த QR குறியீட்டை வருடுங்கள் அல்லது go.gov.sg/nlb-video-guides இணையப்பக்கத்திற்குச் செல்லுங்கள்!

https://go.gov.sg/nlb-video-guides

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: உள்ளடக்கத்தை வழங்கியோர்)*

- செயலிகளை அதிகாரத்துவ மூலங்களிலிருந்து மட்டுமே பதிவிறக்கம் செய்யுங்கள்.
- உங்கள் சாதனங்களை தீங்கிழைக்கும் மென்பொருட்களிலிருந்து (malware) பாதுகாக்க, உங்கள் மென்பொருளை தொடர்ந்து புதுப்பிக்க மறந்துவிடாதீர்கள்.
- முக்கியமான கோப்புகளைப் பகிராதீர்கள்.

SG:DIGITAL

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY